RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

Asian Research Association

DOI: 10.34256/ijmrd2125

# Buddhist Science in Kundalakesi

# குண்டலகேசியில் பௌத்த அறிவியல்

**M. Sankar** [a, *]

[a] Department of Tamil, Sri Kaliswari College (Autonomous), Sivakasi - 626130, Tamil Nadu, India.
*Corresponding Author Email: sankartamilskcgri@gmail.com

DOI: https://doi.org/10.34256/ijmrd2125
Received: 01-05-2021; Accepted: 23-06-2021; Published: 26-06-2021

**Abstract:** The Buddha attained enlightenment by renouncing royal life and practicing meditation and yoga to alleviate the sufferings of the people due to illness, old age and death. The one who made the world realize the lofty thought that desire is the cause of suffering. Many of the scientific ideas have been stated during the time of Buddhism which appeared to be centered on his teachings. The main purpose of this article is to show how thoughts are recorded in Kundalakesi.

**Keywords:** Buddha, Kundalakesi, Buddhism, Scientific Ideas

**Language: Tamil**

## முன்னுரை

தருக்க நூலான குண்டலகேசி ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று. இந்நூலாசிரியர் நாதகுத்தனார். மணிமேகலை போன்று காப்பியத் தலைவியின் பெயராலேயே இந்நூலும் அழைக்கப்பெறுகின்றது. புறத்திரட்டில் இருந்து மட்டும் 19 பாடல்கள் கிடைத்துள்ளன. இக்காப்பியம் குறித்த செய்தியினை மயிலை.சீனி.வேங்கடசாமியின் 'பௌத்தமும் தமிழும்' என்ற நூலில் கண்டு கொள்க (Venkatasamy, 2007). தமிழகத்தில் பௌத்தம் மிகச் சிறப்புடனும் பெருமையுடனும் போற்றப்பட்டது என்பதைப் பழந்தமிழ் நூல்கள் நமக்குக் காட்டுகின்றன.

## பௌத்தம் வலியுறுத்துபவை

1. ஈகை, அகிம்சை ஆகியவை பௌத்தத்தில் தனிச்சிறப்புடையவை.
2. பௌத்தத்தில் விநயபிடகம், சுத்தபிடகம், அபிதம்ம பிடகம் எனும் மூன்று பிடகங்கள் உள்ளன.
3. கள்ளுண்ணாமை, பொய்பேசாமை, காமமின்மை, கொலை செய்யாமை, களவு செய்யாமை ஆகிய ஐந்து ஒழுக்கங்கள் பற்றிப் பேசுதல்.
4. பெண்களுக்கு மதிப்பளித்தல்.
5. நால்வருணப் பாகுபாட்டை ஏற்றுக் கொள்ளாமை.
6. அன்பு, கருணையை ஆதரித்தல்.
7. ஒழுக்கமே உயர்வு, தாழ்வைத் தீர்மானித்தல்.
8. அநாத்மத் தத்துவத்தை வலியுறுத்துதல்.
9. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் எனும் முத்திற அறங்களை எடுத்துரைத்தல்.
10. நிலையாமையை வற்புறுத்துதல்.

## பௌத்தப் போதனைகள்

அ) உலகம் துன்பமயமானது ஆ) ஆசையே துன்பத்திற்குக் காரணம் இ) ஆசையை அடக்குவதன் மூலம் துன்பத்தைப் போக்கலாம் ஈ) ஒழுக்கமான வாழ்க்கையை மேற்கொள்ளல் ஆகிய நான்கு பெரும் உண்மைகளைப் பௌத்தம் போதிக்கின்றது. நம் வாழ்க்கையின் ஆதாரமாகவும் நம்மை இவ்வுலகத்தோடு இணைப்பதும் ஆசையே ஆகும். தூய்மையான தவ வாழ்விற்கும் இறையருளைப் பெறுவதற்கும் மேலான வாழ்க்கைக்கும் ஆசையை அழித்தாலே போதும். இதனை அறியாத மனிதர்கள் ஆசையை அனுபவித்தால் தீர்த்து விடலாம் என்று நினைக்கின்றனர். ஆனால், அது தவறு. ஆசையை அனுபவித்தால் தீர்ந்து விடாது. மேலும் வளரும் இயல்புடையது. கொழுந்துவிட்டு எரியும் நெருப்பினை அணைக்க நெய்யினை ஊற்றி அணைக்க முடியாது. அதுபோன்றதே ஆசையும் எனக் குண்டலகேசி எடுத்துரைக்கின்றது. இதனைத் தொழுகைஎழும் காதல் தன்னால் துய்த்து யாம் துடைத்தும் என்பார் ∴ அகையழல் அழுவம் தன்னை நெய்யினால் அவிக்கல் ஆமோ என்ற அடிகளில் காணலாம் (Kamala Murugan, 2014).

மேலும், உண்மையான தவ வாழ்க்கைப் பற்றிக் குண்டலகேசி குறிப்பிடுகையில்,

“போர்த்தல் உடைநீக்குதல் பொடித்துகள் மெய்பூசல்

கூர்த்த பணி ஆற்றுதல் குளித்து அழலுள் நிற்றல்

சார்த்தர் இடுபிச்சையர் சடைத் தலையர் ஆதல்

வார்த்தை இவை செய்தவம் மடிந்து ஒழுகல் என்றான்” என்கின்றது.

பௌத்தம் நிர்வாணம் அடைதல் பற்றிப் பேசுகின்றது. புத்தரின் போதனைப்படி ஒரு மனிதன் உயர்ந்த நிர்வாணத்தை அடைய வேண்டுமெனில், புத்தர் போதித்த எண் வழிப் பாதையைக் கடைப்பிடிக்க வேண்டும். அவையாவன:

1. நன்னம்பிக்கை 2. நல்லார்வம் 3. நற்பேச்சு 4. நற்செயல்

5. நல் வாழ்க்கை 6. நன்முயற்சி 7. நற்சிந்தனை 8. நல்ல தியானம் என்பன.

இவற்றை அட்டமார்க்கம் என்பர். குண்டலகேசியில் உள்ள 3 ஆம் பாடல் நற்சிந்தனையைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. வலிமையான பாய்மரக்கப்பல்கள் கடலில் வீசும் காற்றினையே ஆதாரமாகக் கொண்டு மிதந்திடும். அவ்வாறே உலக உயிர்களானது நல்வினை, தீவினை என்ற நிலையினைப் பொருத்து செயல்படும். எனவே, நற்சிந்தனை என்பது அறமும் தூய்மையான மனமும் உடையவர்களுக்கே கிட்டும். அத்தகைய இன்பம் கிடைக்க தூய்மையான மனம் படைத்த புத்த பகவானை வணங்கிட வேண்டும் என்கின்றது. இதனை,

“வாயுவினை நோக்கிஉள மாண்டவய நாவாய்

ஆயுவினை நோக்கிஉள வாழ்க்கை அதுவேபோல்

தீயவினை நோக்கும்இயல் சிந்தனையும் இல்லாத

தூயவனை நோக்கியுள துப்புரவும் எல்லாம்”என்ற பாடலில் காணலாம் (Kamala Murugan, 2014).

குண்டலகேசியில் இடம்பெற்ற 17 ஆம் பாடல் குற்றம் இல்லாத நல்வாழ்க்கையினைப் பற்றி எடுத்துரைக்கின்றது. தேவர்கள் அனைவரும் புகழ்ந்து போற்றி வணங்கக் கூடியவராக இருக்கும் சிவபெருமானின் கழுத்தில் ஒரு கருப்பு நிறத்திலான கண்டம் அமைந்து, அவரது அழகினைக் குறைக்கின்றது. அவ்வாறே, இவ்வுலகத்தில் வாழும் மக்களிடமும் குற்றங்கள் உள்ளன. அவரிடத்து இருந்தால் தவறில்லை என்றும் மனிதர்களிடத்து உள்ள குறைகள் தவறானவை என்று நினைத்துவிடக் கூடாது. குற்றங்கள் யாரிடத்து இருந்தாலும் குற்றமே. உலக வாழ்க்கை என்பது குற்றம் நிறைந்ததாக அமைந்திருந்தாலும், அதனைத் தவிர்த்து வாழ்ந்திட வேண்டும் என்பதையே வலியுறுத்துகின்றது குண்டலகேசி.

“மண்ணுளார் தம்மைப் போல்வார் மாட்டாதே அன்று வாய்மை

நண்ணினார் திறத்தும் குற்றம் குற்றமே நல்ல ஆகா

விண்ணுளார் புகழதற்கு ஒத்த விழுமியோன் நெற்றி போழ்ந்த

கண்ணுளான் கண்டம்போல் தன்மேல் கறையை யார் கறையன்று என்பார்”

இப்பாடலில் ஆசிரியர் வைதீகச் சமயமான சைவத்தைத் தர்க்க ரீதியாகக் கண்டித்திருப்பதைக் காணலாம் (Kamala Murugan, 2014).

## நிலையாமைத் தத்துவம்

உலகில் தோன்றும் பொருட்கள் ஒரு நாள் அழிந்தே தீரும் என்பதுதான் உலக இயற்கை. இதனை உணர்ந்த பல ஞானிகள் தங்கள் படைப்புகளின் மூலம் பல உண்மைகளை உணர்த்திக் கொண்டே வருகின்றனர். நாதகுத்தனாரும் குண்டலகேசியில் மிகுதியும் நிலையாமையினையே வலியுறுத்துகின்றார். உடல், உயிர், வாழ்க்கை, இளமை, செல்வம் போன்றவை நிலைபேறு உடையவை அல்ல என்பதே பௌத்தத்தின் தத்துவம். இது பற்றி இரா. விச்சலன் கூறுகையில், “பௌத்தத்தின் மையத்தத்துவம் நிலையாமைத் தத்துவம். இது ‘பிரதீத்ய சமுத்பாதம் என அழைக்கப்பெறுகின்றது. இந்த நிலையாமைக் கோட்பாடு பொருள்சார் நிலையாமையோடு அரசியல், பொருளியல், சமூகவியல், அறவியல், தத்துவம் எனப் பல்துறைகளோடும் தொடர்புடையதாய் - உறவுடையதாய்ச் சிறக்கின்றது”என்கின்றார் (Wichalan, 2014). அழகு, அலங்காரம், ஆடை, அணிகலன்கள் வாசனைத் திரவியங்கள் எனப் பல பொருட்களால் அலங்கரித்து மகிழும் இந்த உடல் நிலையற்றது ஆகும். உடலில் இருந்து ஒருவன் விடும் மூச்சுக்காற்றானது, மீண்டும் அவனது மூக்கின் வழியாகவே உள்ளே சுவாசிக்கப்படுகின்றது. அதுவே, அவன் உயிரோடு இருக்கின்றான் என்பதற்குச் சான்று. இதனையே சான்றோர் பெருமக்கள் பெரும்பேறாகக் கருதுகின்றனர். ஆனால், அப்படி வெளியே விட்ட மூச்சுக்காற்றானது ஒருநாள் உள்ளே செல்லவில்லை என்றால் அதனையே ‘மரணம்’ என்று பெயரிட்டு அழைக்கின்றோம். எனவே, நிலையற்ற இந்த உடலின் மீது ஆசை கொள்ளாமல் வாழ்வதே சிறந்தது எனக் குண்டலகேசி அறிவுறுத்துகின்றது.

நம்முடைய இந்த உடலானது நல்ல வாசனை வீசக்கூடியது என்று நினைத்து மகிழ்கின்றோம். ஆனால், இந்த உடலில் ஒன்பது துளைகள் உள்ளன. அவற்றின் மூலம் அழுக்குகள் வெளியேற்றப்படுகின்றன. ஒருநாள் உயிர் மட்டும் பிரிந்து உடல் கிடக்கும் நிலையில் சுடுகாட்டில் உள்ள நாய்களும் நரிகளும் இழுத்துச் சென்று தம்முடைய

வாயினால் பிடித்து இழுத்துச் செல்லும். அப்போது சீழும் இரத்தமும் வடிந்த நிலையில் அருவருக்கக் கூடிய நிலையில் இருக்கும். அத்தகைய உடலையே நாம் இப்போது மணம் வீசக்கூடியது என்று போற்றுகின்றோம். இதனையே குண்டலகேசி,

"உறுப்புக்கள் தாம்உடன் கூடி ஒன்றாய் இருந்த பெரும்பை

மறைப்பில் விழைவிற்குச் சார்வாய் மயக்குவதேல் இவ்வுறுப்புக்

குறைந்தன போல் அழுகிக் குறைந்து குறைந்து சொரிய

வெறுப்பிற் கிடந்த பொழுதின் வேண்டப்படுவதும் உண்டோ" என்ற பாடலில் பதிவு செய்துள்ளது. உடலில் இருந்து உயிர் பிரிந்தால் அது அழுகி, மற்றவர்கள் அருவருக்கும் படியாகிவிடும் என்பதை உணர்த்துவதாக இப்பாடல் அமைந்துள்ளது (Kamala Murugan, 2014).

யாக்கை புழுக்களின் உணவாக மாறக்கூடியது என்பதைக் குண்டலகேசியில் உள்ள 14 ஆம் பாடல் உணர்த்துகின்றது.

"எனதெனச் சிந்தித்தலால் மற்று இவ்வுடம்பு இன்பத்துக்கு ஆமேல்

தினைப்பெய்த புன்கத்தைப் போலச் சிறியவும் மூத்தவும் ஆகி

நுனைய புழுக்குலம் தம்மால் நுகரவும் வாழவும் பட்ட

இனைய உடம்பினைப் பாவியான் எனது என்னல் ஆமோ"

இதில் 'இந்த உடம்பு என்னுடையது' என மகிழ்ச்சியடைந்திருக்கும் நிலையில் இருப்பது முறையற்றது. இந்த யாக்கை ஒருநாள் அழிந்து போகக்கூடிய ஒன்று. உடம்பைவிட்டு உயிர் சென்ற பிறகு தினை அரிசியின் சோற்றினைப் போன்று சிறியவும் பெரியதுமாக இருக்கக்கூடிய புழுக்களுக்கு உணவாக மாறிவிடும். அப்போது இந்த உடம்பு புழுக்களுக்குச் சொந்தமாகும். இத்தகைய இழிந்த தன்மையுடைய உடம்பினை நான் என்றும் எனது என்றும் பேசித்திரிவதனால் என்ன பயன்? என்பதைக் காணலாம்.

மேலும், மனிதப் பிறவி என்பது பல நிலைகளை உடையதாகும். அவ்வகையில் முதலில் தாயின் வயிற்றில் பாளையாக உருவாகி, பின்னர் குழந்தைப் பருவத்தை அடைந்து, தொடர்ந்து காளைப் பருவத்தை அடைகின்றோம். இளமையின் காரணமாகக் காமம் உள்ளிட்ட மயக்கங்களைத் தரும் இளமைப் பருவத்தைக் கடந்த பின்னர் முதுமை நிலையினை எட்டிவிடுகின்றோம். இதனைத் தொடர்ந்து இறப்பு என்பதும் ஒருநாள் வந்து விடுகின்றது. அதை நினைத்தே பலர் அழுகின்றனர். எனவே, இளமையும் யாக்கையும் நிலையுடையனவல்ல என்பதை மக்கள் உணர வேண்டும். இதனை,

"பாளையாம் தன்மை செத்தும் பாலனாம் தன்மை செத்தும்

காளையாம் தன்மை செத்தும் காமுறும் இளமை செத்தும்

மீளும் இவ்இயல்பும் இன்னே மேல்வரு மூப்பும் ஆகி

நாளும்நாள் சாகின் றாமால் நமக்குநாம் அழாதது என்னோ"

என்ற பாடலில் காணலாம்.

உடலும் உயிரும் சேர்வது வாழ்வதற்காகவே. ஆனால், அந்த வாழ்க்கையும் நிலையில்லாதது என்பதைக் குண்டலகேசி வலியுறுத்துகின்றது. ஒருவன் செய்த

தீயசெயலினால், கைது செய்யப்பட்டு, சிறையில் தள்ளப்பட்டு, கொலைத் தண்டனையைப் பெற்றிருந்தாலும், அவனது கொலைத்தண்டனை நிறைவேற்றப்படும் தருணத்தில் மன்னனின் கருணையினால் அவன் மரணத்திலிருந்து தப்பிவிட இயலும். ஆனால் அவன், உயிரைக் கவர வரும் எமனிடமிருந்து தப்பி விட இயலாது. இது தெரியாமல், நாம் அறியாமையினால் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஒவ்வொரு நாளின் விடியலிலும் நம் வாழ்நாள் கூடுகின்றது என்று எண்ணி மகிழ்கின்றோம். ஆனால், உண்மையில் வாழ்நாளை இழந்து கொண்டிருக்கின்றோம் என்பதே உண்மை. இதனை,

"கோள்வலைப் பட்டுச்சாவாம் கொலைக்களம் குறித்துச் சென்றே

மீளினும் மீளக்காண்டும் மீட்சிஒன் றானும் இல்லா

நாள்அடி இடுதல் தோன்றும் நம்முயிர் பருகும் கூற்றின்

வாளின்வாய்த் தலைவைப் பாக்குச் செல்கின் றோம்வாழ் கின்றோமா

என்ற அடிகளின் மூலம் அறியலாம்.

### அரசியல் வாழ்க்கை

நாதகுத்தனார் வாழ்ந்த காலத்தில் ஆட்சி செய்த மன்னனின் சிறப்பை உயர்த்திப் பாடுவதாகப் பின்வரும் பாடல் அமைந்துள்ளது.

"இறந்த நற்குணம் எய்தற்கு அரியவாய்

உறைந்த தம்மை எல்லாம் உடன் ஆக்குவான்

பிறந்த மூர்த்தி ஒத்தான் தங்கள் வெண்குடை

அறங்கொள் கோல்அண்ணல் மும்மத யானையான்

மன்னனாகத் திகழக்கூடியவன் கோபம் கொள்ளாதவனாகவும் பொய்யான நெறிகளைப் பின்பற்றாதவனாகவும் ஆட்சி செய்து, அதன் மூலம் உலக உயிர்கள் துன்பம் அடைந்திடாமல் காத்திடுவதுடன், எமனும் அவர்களது உயிரைக் கவர்ந்து செல்ல இயலாதவாறு தன் ஆணையினால் காத்திடும் வல்லமையுடையவனாக இருக்க வேண்டும். பொருளினை மிகுதியாக உள்ளவர்களிடமிருந்து பெற்று, பொருளற்ற ஏழைகளுக்குக் கொடுத்து உதவும்படியாகச் செய்ய வேண்டும். இத்தகைய நல்லாட்சியினால் மக்களும் மகிழ்ச்சியடைவர் என்பதைக் குண்டலகேசி,

"சீற்றம் செற்றுப்பொய் நீக்கிச் செங்கோலினால்

கூற்றம் காய்ந்து கொடுக்க எனும் துணை

மாற்றமே நவின்றான் தடுமாற்றத்துத்

தோற்றம் தன்னையும் காமுறத் தோன்றினான்"

எனக் குறிப்பிடுகின்றது.

## ஊழ்வினைக் கொள்கை

மனித வாழ்க்கை என்பது நன்மை, தீமை என்ற இரு செயல்களின் மூலமே கட்டமைக்கப்படுகின்றது. இம்மையில் செய்த தீவினையே ஊழ்வினையாக மாறி, மனிதனைத் துன்புறுத்தும் என்பதையே தமிழ் இலக்கியங்கள் கட்டமைத்துள்ளன. குண்டலகேசியும் கர்மாக் கொள்கையையே வலியுறுத்துகின்றது. கர்மவினையே ஆக்கலையும் அழித்தலையும் செய்கின்றது. அழியும் இயல்புடைய பொருள் ஒருநாள் அழிந்தே தீரும். அப்படி அழிந்து போகாமல் அப்பொருளைக் காத்திடுவது என்பது நம்மால் ஆகாத செயல். இதேபோன்று, வளரும் தன்மையுடைய பொருள்களும் வளர்ந்தே தீரும். இதனை யாரும் முயற்சி செய்து தடுக்க இயலாது. நம்முடைய நல்வினை, தீவினைக்கேற்ப அதனை நாம் அனுபவித்தே ஆக வேண்டும். இவற்றை நம்மால் தடுத்துவிட இயலாது. ஆதலால் பொருளின் அளவு வளர்ந்திடும்போது அதனைக் கண்டு அதிகமான மகிழ்ச்சி அடைவதும் அல்லது தேடிச் சேர்த்த பொருளினை இழக்க வேண்டிய சூழலில் அதனை எண்ணி வருந்துதல் என்பதான செயல்களைச் சான்றோர் பெருமக்கள் செய்வதில்லை. காரணம் இவ்விரண்டும் ஊழ்வினையின் காரணமாகவே நடைபெறுகின்றது என்பதை உணர்ந்ததால் அவர்கள் அமைதியாகவே இருப்பர். இதனை,

“மறிப மறியும் மலிர்ப மலிரும்

பெறுப பெறும் பெற்று இழப்ப இழக்கும்

அறிவது அறிவார் அழுங்கார் உவவார்

உறுவது உறும்என்று உரைப்பது நன்று”

என்ற பாடல் உணர்த்துகின்றது.

ஒருவன் பெற்ற தண்டனையினால் மன்னன் அவனைச் சிறையிலிருந்து விடுவித்து விடுங்கள் என்று கூறியபோதும் தண்டனைப் பெற்ற அவன் மகிழ்ச்சி அடைவதுமில்லை. அம்மன்னனே அவனை விடுவிக்க வேண்டாம் என்று கூறி, அவனுக்கு மரண தண்டனையை நிறைவேற்றும்படி கட்டளையிடும்போதும் அதைக் கேட்டு அவன் வருத்தம் அடைவதுமில்லை. அமைதியாகவே இரண்டு சூழல்களையும் ஏற்றுக் கொள்கின்றான். அதற்குக் காரணம், அவன் நடக்கும் அனைத்துச் செயல்களுக்கும் வினைப்பயனை ஒட்டியதே என்பதை நன்கு உணர்ந்ததே ஆகும். இதனை, “பாரித்தது எல்லாம் வினையின் பயன் என்ன வல்லான்”என்ற அடியின் மூலம் உணர்ந்து கொள்ளலாம்.

## முடிவுரை

குண்டலகேசி உடல், உயிர், அதனால் உண்டான வாழ்க்கை அனைத்தும் நிலையற்றவை என்பதை அறிவுறுத்துகின்றது. குண்டலகேசியில் நல்வாழ்க்கை, நற்சிந்தனை என்ற நிர்வாணம் அடையும் நிலைகளைக் காணலாம். மனித வாழ்க்கை ஊழ்வினையின் காரணமாகவே பயணிக்கின்றது என்பதைக் குண்டலகேசி வலியுறுத்துகின்றது.

## References

Kamala Murugan, (2014), Speech by Kundalakesi, Sharda Publishing, Chennai, India.

Venkatasamy, M.S., (2007) Buddhism and Tamil, Pavai Publicans, Chennai, India.

Wichalan, I., (2014) Buddhist Science, Pavai Publicans, Chennai, India.

**Funding**

No funding was received for conducting this study.

**Conflict of interest**

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License**

© The author 2021. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

**Cite this Article**

M. Sankar, Buddhist Science in Kundalakesi, Indian Journal of Multilingual Research and Development, Vol 2, Iss 2 (2021) 24-30. DOI: https://doi.org/10.34256/ijmrd2125